2008 ஏப்ரல் 30] [திரு. கே.என். நேரு]

திரு. சி. ஞானசேகரன் அவர்கள் கேட்டுக் கொண்டதற்கிணங்க, இங்கே பதிலளிக்க விரும்புகிறேன். யார் யார் தமிழ்நாட்டிலே வாகனங்களில் சிவப்பு விளக்கைப் பொருத்திக்கொள்ளலாம் என்று அரசாணை இருக்கிறது.

"Governor, Chief Minister, Speaker, Mayors of all Corporations, Ministers, Chief Justice and Judges of High Court, Director General of Police conferred to Chief, Police Commissioner in Cities, Ambulance, Pilot and Escort Vehicles, District Collectors, Superintendent of Police, Range Deputy Inspector General of Police, State Election Commissioner, The Chairman, Tamil Nadu Public Service Commission, Inspector General of Police (Law and Order), Chennai, Inspector General of Police (Law and Order), Southern Zone at Madurai, Chairman and Members of Advisory Board, N.S.A. and Article 14 of 1982, Arcot Nawab"—இந்த 19 பதவிகளில் உள்ளவர்கள் மட்டும்தான் சிவப்பு விளக்கைப் பொருத்திக்கொள்வதற்கு அரசு அனுமதித்திருக்கிறது. மற்றவர்கள் பொருத்தியிருப்பார்களேயானால், அது தவறு. அவர்கள்மீது நடவடிக்கை எடுத்து, சிவப்பு விளக்கைப் பொருத்திக்கொள்ளாத அளவிற்கு ஏற்பாடு செய்யப்படும். (குறுக்கீடுகள்)

(ஊ) உறுப்பினர்கள் கொடுத்துள்ள முன்னறிவிப்புகள்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. கோ. அரி, இல்லை, இல்லை. அடுத்த அலுவலுக்குப் போகலாம். நேற்று நீங்கள் கொடுத்தது சரி. (குறுக்கீடுகள்) அதற்குப் பதில் வரவேண்டும். (குறுக்கீடுகள்) சரி, சொல்லுங்கள். (குறுக்கீடுகள்)

திரு. என். நன்மாறன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே...

செல்வி கே. பாலபாரதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே . . . (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. கோ. அரி, உட்காருங்கள். நீங்கள் கொடுத்திருப்பதை Monday அன்று எடுத்துக்கொள்ளலாம். (குறுக்கீடு) திரு. அரி, அதனை இன்னொரு நாள் திரும்பவும் எடுத்துக்கொள்ள வேண்டியிருக்கும்; இரண்டு நாட்களும் அதையே எடுத்துக்கொள்ள முடியாது, உட்காருங்கள். (குறுக்கீடு) திங்கட்கிழமை அன்று எடுத்துக்கொள்வோம் என்று சொல்கிறேன், அல்லவா? உட்காருங்கள். (குறுக்கீடுகள்)